# OM-AC2 ஸ்பூன் உபகரணம்

## OMNIgene®•GUT அமைப்புடன் பயன்படுத்தப்படுகிறது

### சேகரிப்புச் சாதனம்




நேராக நிற்காத வகையில் குழாய் வடிவமைக்கப்பட்டுள்ளது.

### தயாரிப்புச் செயல்முறை:

- மாதிரியைச் சேகரிப்பதற்கு முன்பு சிறுநீர் கழிக்கவும்.
- மல மாதிரியில் சிறுநீரோ கழிப்பறைத் தண்ணீரோ கலந்திருக்கக் கூடாது.
- டாய்லெட் பேப்பர் அல்லது டிஷ்யூ தேவைப்படக்கூடும்.

### தொகுப்பின் சுருக்க விவரமும் விளக்கமும்:

ஸ்பூன் உபகரணத்துடன் கூடிய OMNIgene®•GUT அமைப்பானது திரவ மல மாதிரியில் (தீவிரமான வயிற்றுப்போக்கு) இருந்து நுண்ணுயிரி டிஎன்ஏ-ஐச் சேகரித்து நிலைப்படுத்துவதற்கான பொருட்களையும் வழிமுறைகளையும் வழங்குகிறது.

### எச்சரிக்கைகள் மற்றும் முன்னெச்சரிக்கைகள்:

- வெளிப்புறப் பயன்பாட்டிற்காக மட்டுமே.
- மஞ்சள் நிறக் கழுத்துப் பகுதியை குழாயிலிருந்து அகற்றக் கூடாது.
- குழாயினுள் உள்ள நிலைப்படுத்தும் திரவத்தை வெளியே சிந்தவிடக் கூடாது.
- திரவம் அல்லது மாதிரியானது கண்களிலோ சருமத்திலோ பட்டுவிட்டால், தண்ணீரில் கழுவவும். உட்கொள்ளக் கூடாது.
- பொருட்கள் அளவில் சிறியவை என்பதால் உட்கொண்டால் மூச்சுத் திணறலை ஏற்படுத்தக்கூடும்.

**சேமிக்கும் முறை:** 15°C-25°C

உயிரி மாதிரிகளை எடுத்துச் செல்வதற்கான பொருந்தக்கூடிய ஒழுங்குமுறைகளுக்கு இணங்க மாதிரிகளை அனுப்பவும். www.dnagenotek.com என்ற இணையதளத்தில் MSDS-ஐப் பார்க்கவும்

### லேபிள் விளக்கம்:

| | |
|---|---|
| ⌛ | தொகுப்பைப் பயன்படுத்துவதற்கான கடைசி நாள்: |
| REF | கேட்டலாக் எண் |
| 🏭 | உற்பத்தியாளர் |
| 15°C / 25°C | சேமிப்பதற்கான வழிமுறைகள் |
| ⚠ | எச்சரிக்கை, பயன்படுத்துவதற்கான வழிமுறைகளைப் பார்க்கவும் |
| LOT | தொகுப்பு எண் |

# பயனருக்கான வழிமுறைகள்

**சேகரிப்பதற்கு முன்பு வழிமுறைகள் முழுவதையும் படிக்கவும்**

**நடைமுறை:**



**1** **முக்கியமான தயாரிப்புச் செயல்முறைகள்:**

- மாதிரியைச் சேகரிப்பதற்கு முன்பு சிறுநீர் கழிக்கவும்.
- மல மாதிரியில் சிறுநீரோ கழிப்பறைத் தண்ணீரோ கலந்திருக்கக் கூடாது.
- டாய்லெட் பேப்பர் அல்லது டிஷ்யூ தேவைப்படக்கூடும்.



**2** மஞ்சள் நிறக் கழுத்துள்ள குழாயைப் பிடித்துக்கொண்டு, தொகுப்பிலிருந்து ஊதா நிற மூடியை மட்டும் கழற்றிவிட்டு, பின்னர் பயன்படுத்துவதற்காக அதைத் தனியே வைக்கவும்.



சிந்திவிடக் கூடாது

**முக்கியக் குறிப்பு:**
குழாயின் மஞ்சள் நிறக் கழுத்துப் பகுதியை அகற்றக் கூடாது.
குழாயில் உள்ள நிலைப்படுத்தும் திரவம் கீழே சிந்திவிடக் கூடாது.




**3** **ஒரு முழு ஸ்பூன்** அளவிலான திரவ மல மாதிரியை மஞ்சள் நிறக் கழுத்துள்ள குழாயினுள் இடமாற்றவும்.

**முக்கியக் குறிப்பு:**
மஞ்சள் நிறக் கழுத்துள்ள குழாயினுள் மல மாதிரி பாய்ந்து செல்லாது இருக்கக்கூடும். படிநிலை #4-ஐத் தொடரவும்.



**4** ஊதா நிற மூடியின் உறுதியான முனைப்பகுதி கீழிருக்கும்படி எடுத்து, மஞ்சள் நிறக் கழுத்துள்ள குழாயில் இறுக்கமாகத் திருகி மூடவும்.







**5** மூடப்பட்ட குழாயைக் குறைந்தது 30 வினாடிகளுக்கு முடிந்தவரை வேகமாக முன்னும் பின்னும் நன்றாகக் குலுக்கவும்.




**6** குழாயினுள் உள்ள நிலைப்படுத்தும் திரவத்துடன் மல மாதிரி கலக்கப்படும்; மாதிரியின் எல்லாத் துகள்களும் கரையாது.

**முக்கியக் குறிப்பு:** படம் A-இல் காட்டப்பட்டுள்ளதுபோல் **பெரிய** துகள்கள் காணப்பட்டால் தொடர்ந்து குலுக்கவும்.




**7** ஸ்பூனை அசல் பேக்கேஜிங்கினுள் வைத்து அல்லது ஒரு டாய்லெட் பேப்பரில் சுற்றி குப்பைத் தொட்டியில் எறிந்துவிடவும்.

**முக்கியக் குறிப்பு:** தொகுப்பை வழங்கியவரால் வழங்கப்பட்டுள்ள டெலிவரி வழிமுறைகளைப் பின்பற்றி, மாதிரியை செயல்முறைக்காக அனுப்பவும்.

---

DNAgenotek™

உயர்தர மாதிரிகள்
நிரூபிக்கப்பட்ட செயல்திறன்


கனடாவில் தயாரிக்கப்பட்டது
DNA Genotek Inc.
3000 - 500 Palladium Drive
Ottawa, ON, Canada K2V 1C2

தொலைபேசி: +1.613.723.5757
தொலைநகல்: +1.613.723.5057
info@dnagenotek.com
www.dnagenotek.com



®OMNIgene என்பது DNA Genotek Inc. நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட வர்த்தக முத்திரையாகும்.
DNA Genotek நிறுவனத்தின் சில தயாரிப்புகள் எல்லாப் பிராந்தியங்களிலும் கிடைக்கப்பெறாமல் இருக்கலாம். விவரங்களுக்கு உங்கள் விற்பனைப் பிரதிநிதியைத் தொடர்பு கொள்ளவும்.
DNA Genotek நிறுவனத்தின் அனைத்து நெறிமுறைகள், வெள்ளை அறிக்கைகள் மற்றும் பயன்பாட்டுக் குறிப்புகள் ஆகியவை எங்களின் www.dnagenotek.com இணையதளத்தின் ஆதரவுச் சேவைப் பிரிவில் (Support Section) கிடைக்கப்பெறுகிறது.

காப்புரிமை (www.dnagenotek.com/legalnotices)
© 2020 DNA Genotek Inc., இது OraSure Technologies, Inc. என்ற நிறுவனத்தின் துணை நிறுவனம், அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை.


PD-PR-01031 (TA - Tamil) Issue 2/2020-08